கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டடம் (க & ப) வட்டம், சேலம் - 636007
அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: பொறிஞர். ஆர். பிரகாசம், எம்.டெக்.,
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப..து., (கூ/பொ)

செ.மு.ஆ.எண்.நிஉ2 / 60 (2019) / 1150 / 2021 / நாள்.07.07.2021.

பொருள்: நியமனம் (நேரடி) - த.நா.அ.ப.தொகுதி - திரு.அ. திருப்பதி (பி.தே.02.03.1984) தமிழ்நாடு அரசுப்பணியாளர். தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி-IV-இல் அடங்கிய 2013-2014 மற்றும் 2014-2015-ஆம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணை வழங்கியது - சாதிச் சான்றிதழின் உண்மைதன்மை அறிக்கை - வழங்கியது - பணிவரன்முறை வழங்கியும் தகுதிகான் பருவம் துவங்கியும் ஆணை வழங்குவது - தொடர்பாக.

பார்வை:
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.264/PSDH-1/2016/நாள்.23.01.2016.
2) முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/5160/2015/நாள்.24.02.2016.
3) தலைமைப் பொறியாளர், (கட்டடம்), பொதுப்பணித்துறை, திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்.க4(1)/1618-3/2016/நாள்.24.02.2016 மற்றும் க4(1)/1618-5/2016/நாள்.24.02.2016.
4) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.நிஉ(2)/568/2016/நாள்.04.03.2016.
5) முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(3)/21804/2021/நாள்.24.06.2016.
6) முதன்மை அரசு செயலாளர் (மற்றும்) தலைவர், மாநில அளவிலான மீளாய்வு குழு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடித எண்.7128/CV3/2016-3/நாள்.01.04.2021

*****

1) பார்வை எண் 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2013-2014 மற்றும் 2014-2015-ஆம் ஆண்டிற்கு நடத்தப்பட்ட தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட பணி வேட்பாளர்களில் பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டட (கப) வட்டம், சேலத்திற்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.அ. திருப்பதி (Thiru.A. Thirupathi) (பி.தே.02.03.1984) (தேர்வாணையர் பதிவு எண்.120124047) இளநிலை உதவியாளர் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணித்தொகுதி பொது விதிகள் விதி 10(a)(i)-ன்படி PB-I ரூ.5200-20200+தர ஊதியம் ரூ.2400/- என்ற ஊதியக் கட்டில் (Pay Band) இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பார்வை-2ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2) பார்வை எண்.3 மற்றும் 4-ல் காணும் செயல்முறை ஆணைகளின் தொடர்ச்சியாக, திரு.அ. திருப்பதி, இவ்வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 04.03.2016 மு.ப அன்று பணியேற்றுக் கொண்டார்.

3) திரு.அ. திருப்பதி இளநிலை உதவியாளராக 04.03.2016 முற்பகல், இவ்வட்ட அலுவலகத்தில் பணியில் சேர்ந்தது முதல் நாளது தேதிவரை, தனியரின் பணிபதிவேட்டினையும், பதிவுருத்தாளையும் ஆய்வு செய்ததில் இவர் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டோ அல்லது குற்றப்பத்திரிக்கை வழங்கியோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய இனங்கள் ஏதுமில்லை. மேலும் தனியரது தாய்மொழி "தமிழ்" ஆகும். எனவே இரண்டாம் மொழியாக தமிழில் தேர்வெழுதி தேர்ச்சிப்பெறவேண்டிய அவசியம் எழவில்லை.

4) இதனை தொடர்ந்து பார்வை எண்.1-இல் காணும் கடிதத்தில் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.அ. திருப்பதி (பி.தே.02.03.1984) (தேர்வாணையர் பதிவு எண்.120124047) இளநிலை உதவியாளர் தற்காலிக பணிநியமனத்தை, தமிழ்நாடு மாநில அளவிலான மீளாய்வு குழுவிலிருந்து தனியரின் சாதிச்சான்றிதழின் உண்மை தன்மையினை குறித்த அறிக்கை பெறப்பட்ட பின்னர்தான் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

5) அதனை தொடர்ந்து பார்வை எண்.5-இல் காணும் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட பார்வை எண்.6-இல் காணும் முதன்மை அரசு செயலாளர் (மற்றும்) தலைவர், மாநில அளவிலான மீளாய்வு குழு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தலைமை செயலகம், சென்னை அவர்களிடமிருந்து திரு.அ. திருப்பதி (தேர்வாணையர் பதிவு எண்.120124047) அவர்களின் சாதிச் சான்றிதழின் மெய்தன்மை பெறப்பட்டுள்ளது.

6) எனவே அரசு ஆணை எண். 2151 / பொ.ப.து., நாள் 27.12.1988-ல் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணியாளர் பொது விதி 23 (எ) 1-ன் கீழ் திரு.அ. திருப்பதி இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 04.03.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும் மற்றும் தகுதிகாண் பருவம் துவங்கியும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

7) தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 04.03.2016 மு.ப. முதல் தகுதிகாண் பருவம் துவங்கி, மூன்றாண்டுகால தொடர்பணியில், இரண்டாண்டு காலம் தகுதி காண் பருவகாலமாக வைக்கப்படுகிறார்.

8) ஆதலால் பார்வை எண்.2ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., (ம) தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் இவர் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் இவ்வாணை வழங்கப்படுகிறது.

9) மேலும், தனியருக்கு ஏற்கனவே இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.568/2016/நிஉ(2)/நாள்.08.09.2016-ன் வாயிலாக வழங்கப்பட்ட பணிவரன்முறை ஆணை இதன்மூலம் ரத்து செய்யப்படுகிறது.

7.7.21

கண்காணிப்புப் பொறியாளர் சார்பில், பொ.ப.து.,
கட்டட (க ‡ ப) வட்டம், சேலம்-7.

07/07/21

பெறுதல்

திரு. அ. திருப்பதி,
இளநிலை உதவியாளர், பொ.ப.து.,
வட்ட அலுவலகம்,
சேலம்-7.